# ૩

*சபை:*

# இதன் ஆரோக்கியமான உரை

## திட்டவட்டமான தன்மையில்

1. ***இதன் நிலைநாட்டப்படுதல் பற்றி ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள் (அரிதான விதிவிலக்குடன்) எவ்விதம் பேசுகின்றார்கள்?***
   *"சபை" என்ற வகையில்.*
2. ***இதைப் பற்றி "சபை" என்று கூறுவதற்குப் பதிலாக இயேசு கூறியது என்ன (மத். 16:18)?***
3. ***நிறுவன அமைப்பின்படியாக சபை என்பது என்னவாக உள்ளது (கொலோ. 1:18)?***
4. ***உரிமைத்துவத்தின்படியாக இதைப் பற்றி எவ்வாறு பேசப் படுகின்றது (எபே. 1:23; கொலோ. 1:24)?***
5. ***கால ஓட்டத்தின்படி, சபை எவ்வாறு விவரிக்கப்பட்டது (அப். 19:9, 23; 22:4)?***

## இதன் உறுப்பினர்களைக் குறிப்பதில்

1. ***விசுவாசத்தைப் பொறுத்தமட்டில் உறுப்பினர்கள் எவ்விதம் பேசப்பட்டனர் (அப். 4:32)?***
2. ***கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் என்ற வகையில், அவர்கள் அடிக்கடி என்னவென்று அழைக்கப்பட்டார்கள் (அப். 9:25, 38)?***
   - *அ. அப். நட. புத்தகத்தில் சபை உறுப்பினர்களுக்கு இந்தச் சொற்றொடர் எத்தனை முறை பயன்படுத்தப்பட்டது? 30.*
   - *ஆ. அவர்கள் யாருடைய சீஷர்களாய் இருந்தார்கள் (அப். 9:1)?*
   - *இ. சீஷர்கள், "சீஷர்களின் சபையார்" என்று அழைக்கப்படாதது ஏன்?*
3. ***பரிசுத்தமாக்குதலைப் பொறுத்தமட்டில், உறுப்பினர்கள் என்னவென்று அழைக்கப்பட்டனர் (அப். 9:13, 41)?***
4. ***ஓட்டத்தின் திட்டவட்டமான தன்மையைப் பொறுத்தமட்டில், அவர்கள் எவ்விதம் விவரிக்கப்பட்டனர் (அப். 9:2)?***
5. ***பரஸ்பர உறவினைப் பொறுத்தமட்டில் அவர்கள் எவ்வாறு விவரிக்கப்பட்டார்கள் (அப். 9:30; 12:17)?***

அ. அப். நட. புத்தகத்தில் இந்தச் சொற்றொடர் சபை உறுப்பினர்களுக்கு எவ்வளவு அடிக்கடி பயன்படுத்தப்பட்டது? 30.

ஆ. எல்லோரும் சகோதரர்களாயிருந்தால், அவர்கள் தேவனுடன் எவ்வாறு உறவுபடுத்தப்பட்டார்கள் (ரோமர் 8:17)?

6. ***கிறிஸ்து என்ற எஜமானரின் கீழ் ஒவ்வொரு உறுப்பினரும் என்னவாக இருக்கின்றார் (அப். 16:17; எபே. 6:6)?***
7. ***ஊழியம் செய்யும் அலகு என்ற வகையில் ஒவ்வொரு உறுப்பினரும் என்னவாக இருக்கின்றார் (ரோமர் 12:4, 5)?***
8. ***சபை உறுப்பினர்களைப் பற்றி அனனியா கூறியது என்ன (அப் . 9:14)?***
9. ***உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் முன்குறிக்கப்பட்ட பெயர் என்ன (அப். 11:26)?***

அ. "கிறிஸ்தவர்" என்பது எதனை அர்த்தப்படுத்துகின்றது?

ஆ. எல்லாரும் எந்தப் பெயரினிமித்தம் பாடுபட்டு தேவனை மகிமைப்படுத்த வேண்டியதாயிருக்கின்றது (1 பேது. 4:16)?

## வளர்ச்சியைக் குறிப்பதில் - சேர்ப்பதில்

1. ***வசனத்தை ஏற்றுக் கொண்டவர்களைப் பற்றிக் கூறப்பட்ட இரு விஷயங்கள் என்ன (அப். 2:41)?***

அ. சபையில் அவர்களைச் சேர்த்துக் கொண்டது யார்? (அப். 2:41, 47)?

ஆ. யாரை மட்டுமே தேவன் சபையில் சேர்க்கின்றார் (அப். 2:47)?

2. ***பிற்பாடு சபையின் வளர்ச்சி எவ்வாறு விளக்கப்பட்டது (அப். 5:14)?***
3. ***உறுப்பினர்களின் மாபெரும் வளர்ச்சி எவ்வாறு எடுத்துரைக்கப் பட்டது (அப். 6:1)?***
4. ***பிற்பாடு வளர்ந்தது எது? பெருகியது எது (அப். 6:7)?***
5. ***பர்னபாவின் ஊழியத்தைப் பற்றிக் கூறப்பட்டது என்ன (அப். 11:24)?***
6. ***இவ்விஷயம் வேறு எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டது (அப். 12:24)?***

## மனமாற்றத்தைப் பற்றிப் பேசுவதில்

1. ***ஆசாரியர்களின் மனமாற்றம் பற்றி எவ்வாறு பேசப்பட்டது (அப். 6:7)?***
2. ***சமாரியர்களின் மனமாற்றம் எவ்வாறு விவரிக்கப்பட்டது (அப். 8:12)?***

அ. இதைப் பற்றி அப்போஸ்தலர்களிடத்தில் வந்த அறிக்கை என்ன (அப். 8:14)?

ஆ. பெரோயாவில் இருந்தவர்கள் வசனத்தை எவ்வாறு ஏற்றுக் கொண்டனர் (அப். 17:11)?

3. ***லித்தா மற்றும் சாரோனில் இருந்தவர்களின் மனமாற்றம் பற்றி விவரிக்கின்ற வாக்கியம் என்ன (அப். 9:35)?***
4. ***"அநேக ஜனங்களின்" மனமாற்றம் எவ்வாறு சித்தரிக்கப்பட்டது (அப். 11:21)?***

*அ. மனமாற்றத்தில் புறஜாதியார் அனைவரும் செய்தது என்ன (அப். 26:17, 18)?*

*ஆ. தெசலோனிக்கேயர்கள் என்ன செய்தனர் (1 தெச. 1:9)?*

***5. கொரிந்தியர்களின் மனமாற்றம் எவ்வாறு முன் வைக்கப்பட்டது (அப். 18:8)?***

## *பிரசங்கித்தலின் நிறைவில்*

***1. சீஷர்கள் எதைப் பிரசங்கிக்கும்படி கட்டளை பெற்றனர் (அப். 5:20)?***

***2. சிதறிப் போன சபை என்ன செய்தது (அப். 8:4, 5)?***

***3. பிலிப்பு பிரசங்கித்தது என்ன (அப். 8:35)? சவுல் பிரசங்கித்தது என்ன (அப். 9:20)?***

***4. லீஸ்திராவிலும் தெர்பையிலும் பவுல் பிரசங்கித்தது என்ன (அப். 14:7, 21)?***

***5. பவுல் தாம் எதை அறிவித்திருந்ததாக் கூறினார் (அப். 20:27)?***